

# செய்தி வெளியீடு

ஒன்ராறியோ
வரவு செலவுத் திட்டம் •2014

நிதி அமைச்சு

## ஓர் ஒளிமயமான, வலுவான நாளைக்கென, இன்று ஒன்ராறியோவைக் கட்டியெழுப்புதல்

*வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும், பொருளாதாரத்தை வளர்ப்பதற்கும், நவீன போக்குவரத்து மற்றும் உட்கட்டமைப்பைக் கட்டியெழுப்புவதற்கும், பணி ஓய்வின்போது ஒன்ராறியோவாசிகளுக்கு உதவுதற்குமான திட்டத்துடன், 2017-18 அளவில் வரவு செலவுத் திட்டத்தைச் சமநிலைப் படுத்தியபடி, 2014 வரவு செலவுத் திட்டமானது முன்னோக்கி நகர்கிறது*

**செய்திகள்** ஜூலை 14, 2014

நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்குமான வாய்ப்பையும் பாதுகாப்பையும் கட்டியெழுப்புவதற்கான தனது திட்டத்துடன் ஒன்ராறியோ முன்னோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது. நிதியமைச்சர் சார்ள்ஸ் சூசாவினால் (Minister of Finance) Charles Sousa இன்று சமர்ப்பிக்கப்பட்ட 2014 ஒன்ராறியோ வரவுசெலவுத் திட்டமானது, உயர் திறன் மிக்க வேலைப்படை ஒன்றில் முதலீடு செய்தல், நவீன உட்கட்டமைப்பையும் போக்குவரத்து வலையமைப்புகளையும் கட்டியெழுப்புதல், ஆற்றல் மிக்கதும் புதுமை மிக்கதுமான ஒரு வணிக சூழலுக்கு ஆதரவளித்தல் என்பன மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கிறது.

பணியாட்கள் பெறுவதற்கு அருகதைகொண்ட பணி ஓய்வுப் பாதுகாப்பினைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளையும் இந்த வரவுசெலவுத் திட்டம் மேற்கொள்கின்றது. இது நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் ஒரு முன்னெடுப்பாகும். அரசாங்கம் பொறுப்புடன் செலவுசெய்தலைத் தொடர்ந்து நிர்வகித்து, 2017-18 அளவில் பற்றாக்குறையை நீக்கும். 2014 வரவுசெலவுத் திட்டத்தில் வரையப்பட்டவாறு, நிதியாண்டின் இலக்குகளை அடையும் பொருட்டு, ஒவ்வொரு பிரதேசத்து மக்களுக்கும் அதிக வாய்ப்புகளையும் பாதுகாப்பையும் உருவாக்கிக்கொண்டும், ஒன்ராறியோ மக்களுக்கும் வணிகங்களுக்கும் போட்டி அடிப்படையிலான அனுகூலங்களை வழங்கவல்ல மூலோபாய முதலீடுகளைச் செய்துகொண்டும், அரசாங்கமானது செலவினங்களைக் கவனமாக நிர்வகிக்கும்.

### மக்களது திறமைகளையும் திறன்களையும் கட்டியெழுப்புதல்

சவால் மிக்கதொரு பூகோளப் பொருளாதாரச் சூழலுக்கு மத்தியிலும், ஒன்ராறியோவானது வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்ற, பொருளாதாரத்தை வளர்க்கின்ற, பணியாட்களுக்கான வாய்ப்புகளை இன்றும் நாளையும் விரிவாக்குகின்ற முதலீடுகளைத் தொடர்ந்து கவர்ந்து வருகிறது. ஒன்ராறியோவின் திறமை மிக்க வேலைப்படையே முதலீடுகளைக் கவர்வதற்கும் பொருளாதார வளர்ச்சியை தக்க வைப்பதற்குமான அதன் மிகப் பெரும் சொத்தாகும். இவ்வரவுசெலவுத் திட்டம் பின்வருவன ஊடாக ஒன்ராறியோ மக்களது வலிமையைக் கட்டியெழுப்புகிறது:

- ஒன்ராறியோவின் ஒவ்வொரு குழந்தையும் வாழ்வை மிகச்சிறப்பாக ஆரம்பிக்கும் வகையில், இந்த இலையுதிர் காலத்தில் முழுநேரப் பாலர் வகுப்பு (Full-Day Kindergarten) அறிமுகத்தைப் பூரணப்படுத்தி, குழந்தை பராமரிப்பை நவீனமயப்படுத்துவதிலும் உறுதிப்படுத்துவதிலும் முதலீடு செய்தல்.

- 21ஆம் நூற்றாண்டில் இளம் கற்கையாளர்கள் தலைமை தாங்கும் தகுதிபெறுவதை உறுதி செய்யும் வகையில், வகுப்பறைத் தொழில்நுட்பத்தில் முதலீடு செய்தல்.
- அதிக வாய்ப்புகளுக்கு வழிவகுக்கவல்ல பட்டத்தை அல்லது டிப்ளோமாவை சுமார் 260, 000 இளைஞர்கள் பெற வாய்ப்பளிப்பதை உறுதிசெய்வதற்கென 30% ஒன்ராறியோ கல்வி மானியக் கழிவை (30% Off Ontario Tuition grant) வழங்குதல்.
- ஒன்ராறியோ வேலைச் சந்தையில் இடம்பிடிக்கும் வாய்ப்பைக் கூடுதலான இளைஞர்களுக்கு வழங்குவதற்வென, ஒன்ராறியோ இளைஞர் வேலைகள் மூலோபாயத்தை (Ontario Youth Jobs Strategy) நீடித்தல். இந்த மூலோபாயத்தின் ஒரு பகுதியாக, இளைஞர் வேலைவாய்ப்பு நிதியமானது (Youth Employment Fund) செப்டம்பர் 2013 தொடக்கம் 16,500க்கும் மேற்பட்ட இளைஞர்கள் வேலை அனுபவத்தைப் பெற்று, வேலைவாய்ப்புகளைக் கண்டடைய ஏற்கனவே உதவியுள்ளது.

<u>நவீன உட்கட்டமைப்பையும் போக்குவரத்தையும் கட்டியெழுப்புதல்</u>

ஒன்ராறியோவின் பொதுசனக் கட்டமைப்பு உள்ளடக்கும் எமது சாலைகள், பாலங்கள், போக்குவரத்துத் தொகுதிகள், மருத்துவமனைகள், பாடசாலைகள் என்பன வாழ்வதற்கும், பணிபுரிவதற்கும், முதலிடுவதற்கும் உகந்த உலகின் மிகச்சிறந்த இடங்களில் ஒன்றாக இம்மாகாணத்தை உருவாக்க உதவுகிறன. ஒன்ராறியோவின் உட்கட்டமைப்பு அனுகூலத்தைக் கட்டியெழுப்புவதற்கென அடுத்த 10 ஆண்டுகளுக்கு, உட்கட்டமைப்பில் 130 பில்லியனுக்கும் மேலான டொலரை 2014 வரவுசெலவுத் திட்டம் முதலிடுகிறது. இம்முதலீடு உடனடியாக வேலைவாய்ப்புகளை உருவாக்கும்; ஒன்ராறியோவின் உற்பத்தித் திறனை முன்னேற்றும்; நாளைய வேலைவாய்ப்புக்கும் வளர்ச்சிக்கும் ஆதரவளிக்கும். இது பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது:

- நெடுஞ்சாலைகள், பொதுசனப் போக்குவரத்து, சாலைகள், பாலங்களில் முதலிடுவதன் மூலம், ஒரு தடையற்ற, மாகாணம் தழுவிய போகுவரத்து வலையமைப்பை கட்டியெழுப்பவென, அடுத்துவரும் 10 ஆண்டுகளுக்குக் கிடைக்கக்கூடிய, கிட்டத்தட்ட 29 பில்லியன் டொலர், புதிய நிதி அர்ப்பணிப்பு. சனத்தொகைக்கேற்ப இந்நிதியமானது நியாயமாகவும் வெளிப்படையாகவும் பிரித்தளிக்கப்படும். அவ்வகையில் ரொறன்ரோ மற்றும் ஹமில்ரன் பெரும்பாகம் (Greater Toronto and Hamilton Area - GTHA) 15 பில்லியன் டொலரையும், ஒன்ராறியோவின் ஏனைய பகுதிகள் கிட்டத்தட்ட 14 பில்லியன் டொலரையும் பெறும்.
- Ring of Fire பகுதியில் மூலோபாயப் போக்குவரத்து உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்து, வடபகுதியின் பொருளாதார வளர்ச்சியையும் வேலைவாய்ப்புச் சாத்தியத்தையும் திறந்து விடுதலுக்கான ஓர் 1 பில்லியன் டொலர் ஒப்புதல்.
- அடுத்துவரும் 10 ஆண்டுகளுக்கு ஆரம்பநிலை, இடைநிலைப் பாடசாலைகளை நவீனமயப்படுத்துவதில் 11 பில்லியன் டொலருக்கு மேலான ஒரு முதலீடு.
- அடுத்துவரும் 10 ஆண்டுகளுக்கு, பிரதான மருத்துவமனை விரிவாக்கம் மற்றும் மீள் அபிவிருத்திச் செயல் திட்டங்களில் 11.4 பில்லியனுக்கும் மேலான டொலர்.
- ஆவல் மிக்க, திறமை மிக்க இளைஞர்கள் ஒன்ராறியோவில் உள்ளமையால், பல கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் இருப்பதை உறுதி செய்வதற்கென, புதிய அல்லது விரிவாக்கிய இடைநிலைக்குப் பின்னரான கல்வி வளாகங்கள்.

## ஆதரவுமிக்க, சக்திவாய்ந்த ஒரு வணிக சூழலைக் கட்டியெழுப்புதல்

ஒன்ராறியோவின் பன்முகப் பொருளாதாரமானது மக்களையும் பொருட்களையும் திறம்பட நகர்த்தும் உட்கட்டமைப்பினாலும், வளர்ந்துவரும் வணிகங்கள் நாடும் ஓர் உயர் திறன்மிக்க வேலைப் படையாலும், அனைத்துலக அளவில் போட்டியும் அனுமானிப்பும் மிக்க பெருநிறுவன வரியினாலும் நீடித்து நிலைத்து நிற்கிறது. ஒன்ராறியோவின் சக்திவாய்ந்த, புதுமைமிக்க வணிக சூழலின் வலுவைக் கட்டியெழுப்ப, 2014 வரவு செலவுத் திட்டம் வணிகங்களுக்கும், சமூகங்களுக்கும், மக்களுக்கும் நிலையான பொருளாதார பலாபலன்களை விளைவிக்கும் மூலோபாயக் கூட்டுப் பங்குடமைகளில் முதலீடு செய்கிறது. இது பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது:

- ஏற்றுமதிகளை அதிகரித்து, புதிய முதலீடுகளைக் கவர்வதற்கென, பூகோள வர்த்தகப் பயணங்கள் உட்பட, உள்ளூர் மற்றும் அனைத்துலகக் கூட்டுப் பங்குடமைகளில் ஒரு கவனம்.
- வேலைவாய்ப்பு மற்றும் செழுமை நிதியத்தின் (Jobs and Prosperity Fund) 10 வருட 2.5 பில்லியன் டொலர் ஆதரவில், வணிகங்களுடனான மூலோபாய மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கல் கூட்டுப் பங்குடமைகளில் ஓர் உச்சக் கவனம். இந்நிதியத்தின் மூலம் ஒன்ராறியோவின் பாரம்பரிய மற்றும் வளர்ந்துவரும் தொழிற் துறைகள், புதிய முதலீட்டாளர்களுக்கு ஓர் அனைத்துலகப் போட்டியாகக் கருதப்படும் இப்போட்டியில் வெற்றி பெறும். அத்துடன் ஒவ்வொரு பாகத்திலும் உள்ள சமூகங்கள் பயன்பெறும்.

## பணி ஓய்வுப் பாதுகாப்பைக் கட்டியெழுப்புதல்

பணியிலிருக்கும் குடும்பங்கள், ஒரு மேலும் பாதுகாப்பான பணி ஓய்வைப் பெற உதவுதற்கென, ஒன்ராறியோ பணி ஓய்வூதியத் திட்டத்தை (Ontario Retirement Pension Plan) மாகாணம் உருவாக்கும். சிபீபீ (CPP) பண வழங்கீட்டுடன் இணைக்கப்படும்போது, அவர்களுக்குரிய சௌகரியமான பணி ஓய்வை வழங்க இது உதவும். ஒன்ராறியோ பணி ஓய்வூதியத் திட்டம் (Ontario Retirement Pension Plan):

- பணவீக்கத்துக்கேற்றதும், பணி ஓய்வின்பின்னர் ஆயுள் பூராவும் வழங்கப்படுவதுமான ஒரு அனுமானிக்கத்தக்க வருமானப் பெருக்கை வழங்கும்.
- ஒரு பணியிட ஓய்வூதியத் திட்டமற்ற 3 மில்லியனுக்கும் அதிகமான ஒன்ராறியோவாசிகளுக்கு கட்டாயமாக்கப்பட்ட இத்திட்டம், வேலை பெறுநர்களிடமிருந்தும் வேலை வழங்குநர்களிடமிருந்தும் நியாயமான, சமமான பங்களிப்பை வேண்டி நிற்கும்.
- ஒமேர்ஸ் (OMERS) நிறுவனத்தின் முன்னாள் சீஈஓ (CEO) மிசேல் நொப்றெகாவின் (Michael Nobrega) செயற்படுத்துகையுடன், அரசாங்கத்தின் நேரடிக் கண்காணிப்பில் இயங்கும்.
- மக்கள் தமது வாழ்க்கைத் தரத்தைப் பேணியபடி தொடர்ந்து செலவினங்களை மேற்கொள்வதற்கு, இப்பணக் கொடுப்பனவுகள் உதவும்போது, நீண்டகாலப் பொருளாதார பலாபலன்களை இது ஒன்ராறியோவுக்கு மீள வழங்கும்.
- பரந்த அளவிலான அபிப்பிராயங்கள் கேட்டறியப்பட்டதை உறுதி செய்யும் பொருட்டு, ஓய்வூதிய வல்லுநர்கள், மாகாணங்கள், வணிகங்கள், தொழிலாளர்களுடனான ஆலோசனைகளுடன் உருவாக்கப்படும்.

## வாய்ப்புகளையும் ஒரு நியாயமான ஒன்ராறியோவையும் கட்டியெழுப்புதல்

ஒன்ராறியோவின் வெற்றி சகல மக்களதும் வெற்றியிலேயே தங்கியுள்ளதென்பதை அரசாங்கம் விளங்கிக்கொள்கிறது. பின்வருவனவற்றை உள்ளடக்கும் வழிமுறைகளூடாக, பொருளாதார வளர்ச்சிக்கு மேலும் ஆதரவளிக்கும் ஒரு நியாயமான ஒன்ராறியோவை, 2014 வரவுசெலவுத் திட்டம் கட்டியெழுப்புகிறது:

- வருமான ஆதரவுகளை முன்னேற்றி, வேலை அணியினுள் இணைந்துகொள்வதற்கான தடைகளைக் குறைக்கும் சமூகநல உதவி ஒழுங்கமைப்பினைத் தொடர்ந்தும் சீர்திருத்துதல்.
- ஜூன் 1, 2014இல் ஆகக் குறைந்த ஊதியத்தை மணித்தியாலத்துக்கு 11 டொலராக உயர்த்திய பின்னர், பணியாட்கள் ஒரு திருப்திகரமான ஊதியத்தைப் பெறுவதை உறுதிப்படுத்த உதவும் வகையில், பணவீக்கத்திற்கேற்ப இந்த ஆகக் குறைந்த ஊதியத்தைக் சுட்டியிடுவதற்குச் சட்டத்தைப் பிரேரித்தல்.
- மாதிரி எடுத்துக்காட்டாக உள்ள, வதிவிட வீதக் கட்டணம் செலுத்துநர் ஒருவர், வருடாந்தம் 70 டொலரைச் சேமிக்கும் வகையில், டிசெம்பர் 31, 2015க்குப் பின்னர் வதிவிடப் பாவனையாளர்களின் மின்சாரக் கட்டணச் சீட்டுகளிலிருந்து கடன் பணி ஓய்வுக் கட்டணச் செலவை (Debt Retirement Charge) அகற்றுவதற்குப் பிரேரித்தல்.
-
-
-

<u>நிதியாண்டுச் சமநிலையை நோக்கிக் கட்டியெழுப்புதல்</u>

2017-18 அளவில் பற்றாக் குறையை அரசாங்கம் அகற்றும். பொறுப்புடன் செலவினங்களை நிர்வகிப்பதனூடாகவும், புதிய வளர்ச்சியில் மூலோபாயத்துடன் முதலீடு செய்வதனூடாகவும் 2014 வரவுசெலவுத் திட்டம் இதற்கான பாதையை இடுகிறது. அரசாங்கத்தினூடான வெளிப்படைத் தன்மைக்கும், திறமைக்கும், நம்பகத் தன்மைக்கும் பரிந்து போராடவிருக்கும் புதிய நிதிச் சபைத் தலைவரது (President of the Treasury Board) உதவியுடன், ஒரு சமநிலைப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட இலக்கை ஒன்ராறியோ அடைந்து, பொருளாதார மந்த நிலைக்கு முன்னரான மொத்த உள்நாட்டு உற்பத்திக் கடன் மட்டங்களை நோக்கி நகரும். 2014 வரவுசெலவுத் திட்ட வழிமுறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- டீடி பேங்க் குரூப் (TD Bank Group) இனது முன்னாள் குழுநிலைத் தலைவரும் (Group President), பிரதம நிறைவேற்று அதிகாரியுமான (CEO) எட் கிளார்க்கின் (Ed Clark) தலைமையிலான ஓர் ஆலோசனைச் சபையுடன் மாகாணத்தின் சொத்துக்களிலிருந்து மேலும் அதிக பெறுமதிகளைப் பிரித்தெடுத்தல்.
- நாட்டின் ஆகக் குறைந்த செயல் திட்டச் செலவுசெய்யும் அரசாங்கம் என்ற தலைமைத்துவத்தைத் தொடர்தல்.
- கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும், எதிர்வுகூறப்பட்டதைவிடக் குறைவான நிகழ்ச்சித்திட்டச் செலவினத்தை மேற்கொண்ட வழியில், செலவின நிர்வகிப்பைத் தொடர்தல்.
- இன்றும் நாளையும் வளர்ச்சியை உருவாக்குவதற்கென, மக்களிலும், உட்கட்டமைப்பிலும், வணிக பங்குடைமைகளிலும் மூலோபாய அடிப்படையில் முதலிடுதல்.
- ஒன்ராறியோவின் 98 சதவீதமானோரது வரி செலுத்துகையில் மாற்றமேதுமின்றி, உச்ச வரி செலுத்தும் இரண்டு சதவீதத்தினருக்கான தனியாள் வருமான வரியை அதிகரிக்குமாறு பிரேரித்தல்.

## ஒரு வலுவான கனடாவைக் கட்டியெழுப்புதல்

கூட்டாட்சிக்கான நிகர நிதிப் பங்களிப்பாளர் எனும் வகையில், கூட்டாட்சி அரசிடமிருந்து நியாயமான நிதி நடத்துகையை ஒன்ராறியோ எதிர்பார்க்கிறது. ஆயினும் இவ்வாண்டுக்கான பிரதான கூட்டாட்சி மாற்றீடுகள் 641 மில்லியன் டொலர் குறைவானவை. இது நியாயமற்ற நடத்துகையென சுயாதீன நிபுணர்கள் மற்றும் கனடாவின் பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலராலும் (Canada's Parliamentary Budget Officer) குறிப்பிடப்பட்டுள்ளது. கூட்டாட்சி அரசிடமிருந்து நியாயமான நிதி மாற்றீடுகளைக் கோரி ஒன்ராறியோ தொடர்ந்து வலியுறுத்துவதுடன், தேசிய, மாகாண விடயங்களில் கூட்டாட்சியின் பங்குடைமையையும் நாடிநிற்கும். பின்வருவன உட்பட, தேசிய, மாகாண விடயங்களில் ஒன்ராறியோவின் 2014 வரவுசெலவுத் திட்டம் நடவடிக்கைகளை எடுக்கிறது.

- Ring of Fire பகுதியிலுள்ள மூலவள உள்ளாற்றல்களைத் வெளிவிடுதல்.
- ஒன்ராறியோ வாசிகளின் பணி ஓய்வுச் சேமிப்புகளை மேம்படுத்திப் பாதுகாத்தல்.
- எமது பொருளாதாரத்தின் தொடர்ச்சியான வளர்ச்சிக்குத் தேவையான சாலைகளையும் பொதுப் போக்குவரத்து ஒழுங்கமைப்புகளைக் கட்டியெழுப்புதல்.

அதிக வேலைவாய்ப்புகளுடனும், அதிக சந்தர்ப்பங்களுடனும், அதிக எதிர்காலப் பாதுகாப்புடனும் கூடிய ஒரு வலுவான ஒன்ராறியோவுக்கான ஒரு விரிவான திட்டத்தை இந்த 2014 வரவுசெலவுத் திட்டம் வடிவமைக்கின்றது. உடனடி வாய்ப்புக்களுடனும், எமது எதிர்காலத்திற்கான பாதுகாப்புடனும் இது ஒன்ராறியோவைக் கட்டியெழுப்பும்.

**மேற்கோள்**

“ஒன்ராறியோவாசிகளுக்குப் பிரகாசமும், வலிமையும் மிக்கதோர் எதிர்காலத்திற்கான ஒரு திட்டத்தை எமது வரவுசெலவுத் திட்டம் வழங்குகிறது. மாகாணத்தின் சகல பகுதிகளிலுமுள்ள மக்களுக்கும் உயரிய வாய்ப்புகளையும் பாதுகாப்பையும் இது உருவாக்குகிறது. ஒன்ராறியோவாசிகள் எங்களுக்கும் எங்கள் திட்டத்திற்கும் பொறுப்பு வழங்கியுள்ளனர். இன்று நாம் முன்னோக்கி நகர ஆரம்பித்திருக்கிறோம். புதிய வளர்ச்சிக்கு அவசியமான கல்வியிலும் திறன் பயிற்சியிலும் நாங்கள் முதலீடு செய்வோம். சனநெருக்கடியைக் குறைப்பதற்கென நாங்கள் பொதுசனப் போக்குவரத்தைக் கட்டியெழுப்பி, புதிய சாலைகளாலும் பெருந்தெருக்களாலும் சமூகங்களை இணைப்போம். உயர் ஊதியம் கொண்ட, அர்த்தமுள்ள வேலைவாய்ப்புகளை உருவாக்கவென, வணிகங்களுடன் நாங்கள் பங்குதாரராவோம். அத்துடன் எமது, பணி ஓய்வாளர்களுக்கு மேலும் உயர்ந்த நிதிப் பாதுகாப்பினை வழங்குவோம். 2017-18 அளவில் வரவுசெலவுத் திட்டத்தை சமநிலைப்படுத்த வேண்டும் என்ற எமது தளராத பொறுப்புணர்வே இத்திட்டத்தின் அடித்தளத்தில் காணப்படுகிறது.

— Charles Sousa, நிதியமைச்சர் (Minister of Finance)

**விரைவான உண்மைகள்**

- 

- ஜூன் 2009 முதலாக ஒன்ராறியோவின் வேலைவாய்ப்பு உருவாக்க வேகம் – அமெரிக்கா, பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பிலுள்ள (Organisation for Economic Co-operation and Development) சராசரி உறுப்பு நாடுகள், எஞ்சிய கனடாவின் இணைந்த பகுதி என்பன உட்பட, அநேகமான அபிவிருத்தியடைந்த நாடுகளைவிட வலுவானதாக இருந்துள்ளது.
- கனடிய மாகாணங்கள் மத்தியில் ஒன்ராறியோவே ஆளுக்கு ஆகக் குறைந்த செயல் திட்டச் செலவினத்தைக் கொண்டது. அத்துடன் கூட்டரசாங்கதிடமிருந்து பெறும் நிதியுட்பட, ஓராளுக்கான ஆகக் குறைந்த மொத்த வருமானத்தையும் பெறுகின்றது. ஆயினும் ஒன்ராறியோ வாசிகளின் நல்வாழ்வுக்கு ஆதாரமளிக்கும் உயர்தரப் பொதுசன சேவைகளை இன்னமும் வழங்குகிறது.
- மோவற் நிலையத்தின் (Mowat Centre) 2013 அறிக்கையின்படி, 2009-10 காலப் பகுதியில் (கடைசியாகத் தரவுகள் கிடைக்கப் பெறும் ஆண்டு) கூட்டாட்சி அரசிடமிருந்து பெற்றதைவிட, மேலதிக 11 பில்லியன் டொலரை கூட்டாட்சி அரசுக்கு ஒன்ராறியோ வழங்கியிருக்கிறது. இது ஒரு ஒன்ராறியோவாசி வழங்கிய 850 டொலரைக் குறிக்கின்றது.
- ஒவ்வொரு டொலரின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் பொறுப்புடைமையின் ஒரு பகுதியாக ஒன்ராறியோவின் பொதுச் சேவைகள் சீர்திருத்த ஆணைக்குழுவின் (Commission on the Reform of Ontario’s Public Services - the Drummond Report) 80 சதவீதத்திற்கும் மேலான விதந்துரைகளை ஒன்ராறியோ அரசு செயற்படுத்துகின்றது.
- பொது உட்கட்டமைப்பில் மீள முதலீடு செய்வதற்கென, ஜெனெறல் மோட்டேர்ஸ் (General Motors) மற்றும் குறிப்பிட்ட மாகாண ஆதனவியல் சொத்துக்களின் பங்குகளிலிருந்து பெறும் வட்டியின் பெறுமதியை வெளியிடும் விடயத்தில் ஒன்ராறியோ அரசு முன்னோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது. ஒன்ராறியோவாசிகளுக்கு மேலும் சிறப்பான பலாபலன்களையும் வருமானங்களையும் உருவாக்குவதில் முன்னுரிமையளித்து, முக்கிய மாகாண சொத்துக்களுக்கிருக்கும் விருப்பத் தேர்வுகளை மதிப்பிடுவதற்கென அரசாங்கச் சொத்துகள் மீதான ஓர் ஆலோசனைச் சபையை (Advisory Council on Government Assets) ஒன்ராறியோ அரசாங்கம் நிறுவியிருக்கிறது.

- போக்குவரத்து மற்றும் போக்குவரத்து உட்கட்டமைப்புக்கு நிதியளிக்க உதவுதற்கென, விமானப் போகுவரத்து எரிபொருளின் வரியை அதிகரிக்கவென அரசாங்கம் பிரேரிக்கின்றது. செப்டெம்பர் 1, 2014இல் லீற்றருக்கு ஒரு சதத்தாலும், வருடாந்தம் 2015, 2016, 2017 ஏப்ரல் 1இல் லீற்றருக்கு ஒரு சதத்தாலும் வரி அதிகரிக்கும்.
- பொதுத்துறை நஷ்ட ஈடு மற்றும் பலாபலன் செலவினங்களை நிர்வகிப்பதற்கென, அரசாங்கம் தொடர்ந்து வலுவான ஆனால் நியாயமான செயற்பாடுகளை மேற்கொள்கின்றது.

## மேலும் அறிந்துகொள்ளுங்கள்

2014 வரவுசெலவுத் திட்டத்தை வாசியுங்கள்

வரவுசெலவுத் திட்ட உரையை வாசியுங்கள்

2014 வரவுசெலவுத் திட்டத்தின் சிறப்பம்சங்களை வாசியுங்கள்

2014 ஒன்ராறியோ வரவுசெலவுத் திட்டத்தின் பின்னணித் தகவல்களை வாசியுங்கள்:

- ஒரு சக்திமிக்க வணிக சூழலையும் வேலைவாய்ப்பையும் உருவாக்குதல்
- நவீன உட்கட்டமைப்பைக் கட்டியெழுப்புதல்
- ஒரு நியாயமான சமுதாயத்தை வளர்த்தெடுத்தல்
- ஒன்ராறியோவாசிகளுக்கான சுத்தமான, நம்பிக்கைக்குரிய, மலிவான சக்தி
- ஒன்ராறியோவின் பொருளாதார வெளிநோக்கும் நிதித் திட்டமும்
- ஒன்ராறியோவாசிகளின் கூட்டாட்சிப் பற்றாக்குறை நிதியளிப்பு
- ஒன்ராறியோவில் பணி ஓய்வுப் பாதுகாப்பைப் பலப்படுத்தல்
- மே 1, 2014இல் சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்ட மசோதாவுக்கும் இன்றைய வரவுசெலவுத் திட்ட மசோதாவுக்கும் இடையிலான வேறுபாடுகள்

---

ஊடக விசாரணைகளுக்கு மட்டும்:

ontario.ca/finance-news

Susie Heath, அமைச்சரின் அலுவலகம் (Minister’s Office), 416-325-3645

Scott Blodgett, நிதியமைச்சு (Ministry of Finance), 416-325-0324

பொதுசன விசாரணைகளுக்கு அழையுங்கள்:

1-800-337-7222
TTY: 1-800-263-7776